International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 02 April to June 2022 www.irjtsjournal.org

# இலங்கையில் நிலைமாறுகால நீதி: நடைமுறைசார்ந்த பிரச்சினைகளும், தீர்வுகளும்

# Transitional justice in Sri Lanka: Practical Issues and Solutions

A. Kanneraj, Senior Lecturer,

*Dept. of Social Sciences, Faculty of Arts & Culture,*

*Eastern University, Sri Lanka.*

**Abstract:**

*Civil war in Sri Lanka has been brought to an end with the armed victory of Sri Lankan government forces. there were many accusations related with war crimes, genocide and violation of human rights made against both parties, Sri Lanka government forces and LTTE. It has been a debatable discourse at the UN Human rights council since 2012. Transitional justice mechanism became most-talk-about matter after the 2015 UN resolution on Sri Lanka. However, the affected people have not obtained any solution in this regard yet.*

*This study sets its statement of the problem that whether the Transitional justice mechanism is appropriate to handle the current issues in Sri Lanka. The objective of the study is to describe the challenges in implementing the transitional justice mechanism in Sri Lanka and to evaluate its appropriateness in dealing with ethnic issues in the country.*

*This study is based on the secondary data analysis and the findings of the study was drawn by analysing the required secondary information. The study finds followings as the challenges in implementing the transitional justice mechanisms; issues in practically identifying the truths, the process is not undertaken by affected people, political activities of political parties in power to maintain their vote banks, issues in protecting the witnesses. Moreover, this study identified drawbacks in implementing the mechanism in the country. They study recommend the post-transitional justice mechanism to bestow remedy for the affected people.*

**ஆய்வுச் சுருக்கம்:**

2009இல் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆயுத முனையில் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த யுத்தம் முடிவுறுத்தப்பட்ட காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள், மனிதப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களினாலும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களாலும், சர்வதேச நிறுவனங்களாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதேவேளை,குறித்தவிடயம் 2012ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் விவாதப்பொருளாகவும் இருந்துவருகின்றது. இந்நிலையில் 2015ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய,இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நிலைமாறுகால நீதிப்பொறிமுறை என்னும் விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், பரிந்துரைக்கப்பட்ட குறித்த இப்பொறிமுறையினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றுவரை நீதியினைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

இலங்கையில் மேற்குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விடயத்தைக் கையாள்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிலைமாறுகால நீதிப்பொறிமுறை பொருத்தமுடையதா? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கமாக,நிலைமாறுகால நீதிப் பொறிமுறையினை முன்னெடுப்பதில் நடைமுறையில் எதிர்நோக்கப்படும் சவால்களை அறிந்து கொள்வதுடன், இப்பொறிமுறையின் பொருத்தப்பாடு தொடர்பில் அறிந்து கொள்வதும் இவ்வாய்வின் துணை நோக்கமாகும்.

இதனடிப்படையில் ஆய்விற்குத் தேவையான இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு, அவை பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் எட்டப்பட்டுள்ளது. அவையாவன;நடைமுறையில் உண்மையைக் கண்டறிவதில் உள்ள சவால்கள், பாதிக்கப்பட்ட மக்களினால் குறித்த பொறிமுறை முன்னெடுக்கப்படாமை,

அரசியல் வாக்குவங்கியைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் செயற்படுகின்றமை,சாட்சிகள் பாதுகாக்கபபடுகின்றமையில் உள்ள சவால்கள்ஆகியனஆய்வின் முடிவாகக்கண்டறியபபட்டுள்ளன. அத்துடன்,குறித்த பொறிமுறையில் உள்ள பலவீனங்கள் எவையென்பது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றிற்கான பரிந்துரையாக பின் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கும் பொருத்தப்பாடான செயற்றிறன் மிக்க பொறிமுறையாக உள்ளதையும் இவ்வாய்வு முன்மொழிந்துள்ளது.

**திறவுச் சொல்**: நிலைமாறுகால நீதிப்பொறிமுறை, பின்நிலைமாறுகால நீதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை,மனித உரிமை மீறல்கள், உள்நாட்டு யுத்தம்

**அறிமுகம்:**

இலங்கையில் இன்று நிலைமாறுகால நீதி தொடர்பில் அதிகம் பேசப்படுகின்றது. ஆயினும், இன்றுவரை நிலைமாறுகால நீதி தொடர்பில் ஒரு தெளிவான புரிதல் அடிமட்ட மக்கள்வரை சென்றடைந்திருக்கின்றதா? என்பது கேள்விக்குரியதாகும்.

இலங்கையில் நிலைமாறுகால நீதி என்றால் என்ன? என்பது தொடர்பில் நோக்குவோமாயின், உள்நாட்டு யுத்தத்திலிருந்து யுத்தமற்ற நிலைமைக்குச் செல்கின்ற இடைப்பட்ட காலமாகஇந் நிலைமாற்றுக் காலத்தினைக் கொள்ளமுடியும். இந்தக் காலகட்டத்திற்கு முன்னைய காலகட்டத்தில் (உள்நாட்டு யுத்த காலத்தில்) பாதிப்புற்ற மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளே நிலைமாறுகால நீதியாகும்.

2015ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில்அமெரிக்கா மற்றும் பிரித்தானியா தலைமையிலான நாடுகள், இலங்கையின் இணை அனுசரணையுடன் முன்வைக்கப்பட்ட பிரேரணையே 30/1 தீர்மானமாகும்.இத் தீர்மானமே நிலைமாறுகால நீதிப் பொறிமுறை தொடர்பான விடயங்களை இலங்கையுடன் தொடர்புபடுத்தி, பாதிக்கப்பட்ட மக்கள் பாரிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கானதொரு பொறிமுறையாக முன்வைக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானத்தின் பிற்பாடே இலங்கையில் நிலைமாறுகால நீதி தொடர்பிலான விடயங்களின் தொடக்கப்புள்ளியாக அமைந்திருந்தது.

இந்த நிலைமாறுகால நீதிப்பொறிமுறை மூலம் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வகையான நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும், இந்த நிலைமாறுகால நீதிப்பொறிமுறையில் காணப்படுகின்ற பலவீனங்கள் தொடர்பிலும்,நிலைமாறுகால நீதிப்பொறிமுறைக்கான மாற்று ஏற்பாடு தொடர்பிலும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை:**

இலங்கையில் முப்பது வருடங்களுக்குமேல் நீடித்த உள்நாட்டு யுத்தமானது 2009ஆம் ஆண்டு முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், நடைமுறையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தாலும், சமாதானம் நிலவவில்லை என்பதே யதார்த்தமாகும். இந்த நிலையில், உள்நாட்டு யுத்தத்தில் முடிவில் பல்வேறு யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், காணாமல் போதல் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பாதிக்கப்பட்ட மக்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் கிடைக்காமையினால் சர்வதேச ரீதியான அழுத்தங்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கப்பட்டு,நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் இலங்கையில் 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் இடம்பெற்றது. அக்காலப்பகுதியில் ஆட்சிக்குவந்த நல்லாட்சி அரசாங்கத்தின்இணை அனுசரணையுடன் 30/1 தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.இப்பிரேரணையில் உள்ள விடயங்களை நிறைவேற்ற நிலைமாறுகால நீதிப் பொறிமுறை என்னும் அடிப்படையில் முயற்சிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இணை அனுசரணை வழங்கிய நல்லாட்சி அரசாங்கம், காலநீடிப்பு என்னும் அடிப்படையில் நிலைமாற்றுகால நீதி தொடர்பான தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை தாமதப்படுத்தியிருந்தது. இந்நிலையில் 2018ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், குறித்த பிரேரணையில் இருந்து விலகியிருந்தது. இந்நிலைமையில்,இலங்கை அரசாங்கத்தினால் நிலைமாற்றுகால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் பகுப்பாய்வும், முடிவும்:**

இலங்கையில் நிலைமாறுகால நீதி:நடைமுறைசார்ந்த பிரச்சினைகளும், தீர்வுகளும் என்னும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கத்தின் அடிப்படையில், பண்பு ரீதியான தரவுகள் பெறப்பட்டு, அவை பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இலங்யையில் ஏறக்குறைய 30 வருடகாலம் நீடித்த உள்நாட்டு யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. குறிப்பாக, யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை அவலங்கள் தொடர்பில் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர் முன்பாக யுத்தக் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதைவிட சட்டவிரோத மற்றும் நீதிக்குப்புறம்பான கொலைகள், தன்னிச்சையான கைதுகள், வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர், தடுப்புக் காவலில் உள்ளோர், சித்திரவதை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள், கடத்தல் மற்றும் கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளை மறுத்தமை தொடர்பாகவும் மனித உரிமை ஆணையாளரினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன(Saravanamuthu, 2017).

எவ்வாறாயினும் முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து, குறித்த குற்றச்சாட்டுக்களைக் கையாள்வதற்கு முயற்சிப்பதாக வெளியுலகிற்குக் காட்டப்பட்டது. மறுபுறம்,இவ்வறிக்கை மனித உரிமை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் கவனத்திற் கொள்ளவில்லை என விமர்சிக்கப்பட்டிருந்தது. தவிர அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலும் காலம் தாழ்த்தியிருந்தது. இதனால் சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. இதனால் 2012ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம்மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் பல விமர்சனங்களை தொடர்ச்சியாக முன்வைத்துக்கொண்டிருந்தது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2015ஆம் ஆண்டு நிறைவேற்றிய 30/1 தீர்மானம் தனித்துவமானது. காரணம், ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசாங்கம் குறித்த தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும் இவ்வரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில்கூட கால நீடிப்பு என்னும் அடிப்படையில், நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தியிருந்தது. இறுதியில் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் குறித்த பிரேரணையில் முன்வைக்கப்பட்டிருந்த கடைப்பாடுகளை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்கியிருந்தது.இந்தநிலையில், நடைமுறையில் நிலைமாறு கால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எதிர்நோக்கப்படும் சவால்கள் தொடர்பில் நோக்குவோம். அவையாவன;

**இலங்கையில் நிலைமாறுகால நீதிப்பொறிமுறை நடைமுறையில் எதிர்நோக்கும் சவால்கள்:**

நிலைமாறுகால நீத்க்கான சர்வதேச நடுவகம், தமது கொள்கை விளக்கவுரையில் நிலைமாறுகால நீதிக்கட்டமைப்புக்குள் பின்வரும் கூறுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தது(Crocker,2019). அவையாவன;

உண்மையை வெளிப்படையாகப் பேசும் நிலையினை ஏற்படுத்துதல்.

நீதியை நிலைநாட்டுவதற்குரிய பொறிமுறையை உருவாக்குதல்.

இழப்பீட்டிற்கானதொரு பொறிமுறையினை உருவாக்குதல்.

பிரச்சினைகள் மீண்டும் இடம்பெறாமைக்கான பொறிமுறையினை உருவாக்குதல் என்பனவாகும்.

நிலைமாறுகால நீதிச் செற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் 2019ஆம் ஆண்டு 40 ஆவது அமர்வில் இலங்கை சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன(Foreign Ministry, Sri Lanka, 2017). அவையாவன;2017ஆம் ஆண்டு முதல் மனிதஉரிமைகள் தொடர்பில் இலங்கை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்களைக் கண்டிருப்பதாகவும், இதற்கமைய பின்வரும் விடயங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் இங்குமுன்னெடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தது. அவையாவன;உண்மையைக் கண்டறிதல், காணாமல் போனோருக்கான அலுவலகம் சட்டபூர்வமாக நிறுவப்பட்டுள்ளமை,மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்டவரைபுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை கரிசனை காட்டுகின்றமை அத்துடன்,பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதற்கான கலந்தாலோசனைகள் பாராளுமன்றத்தில் நடைபெற்றுவருகின்றமை,இழப்பீடுகளுக்கான ஓர் அலுவலகம் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,திரும்பவும் பிரச்சினை நிகழாது இருப்பதை உறுதிப் படுத்துவதற்காக நல்லிணக்க நிகழ்ச்சி நிரலைமுழுமைப்படுத்துவதற்காக தாம் திடசங்கற்பம் கொண்டுள்ளதாக அரசாங்கத்தின் சார்பில்குறிப்பிடப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், இவ்விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏதுநிலை நடைமுறையில் உள்ளதா? எனப்பார்ப்போமாயின், இங்கு உண்மையினை வெளிப்படையாகப் பேசுவதற்கான ஏது நிலைமை இல்லை. இன்றுவரை ஏறத்தாள 09 ஆணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்டுள்ளன(நவீனன், 2017). இவைகள் கண்டறிந்த உண்மைகளுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் வெளிவரவில்லை. அவற்றிற்கான பொறுப்புக் கூறலும் இடம்பெறவில்லை. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணி“உண்மையைக் கண்டறியும் தரவுகளைச் சேகரித்து, அவற்றை உறுதிப்படுத்த சாட்சியங்களைத் தேடி, இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களைப் பலப்படுத்துவதுவதாகும்”.ஆயினும், குற்றமிழைத்தவர்கள் மீது குற்றப்பொறுப்பையோ, தண்டனைகளையோ சுமத்த முடியாது(Geoff, 2010). இதனடிப்படையில் இடம்பெற்ற உண்மைகள் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயினும், இலங்கையில் அதற்கான சந்தர்பங்கள் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

இங்கு உண்மையை அறியும் பொருட்டு தகவல்களை வெளிக்கொண்டுவருவதற்கான சாட்சிகளைப் பகிரங்கமாகக் கூறும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அல்லது தவறிழைத்ததாகக் கருதப்படுபவர்களிடமே சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைக் கானமுடிகின்றது. இதனால், கடந்தகாலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை நேர்மையாகவும், ஆக்கபூர்வமாகவும் ஆராய்வதற்கான முயற்சிகள் மழுங்கடிக்கப்பட்டிருந்தன(நவீனன்,2017). எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான சட்டம் முன்னோடியாக கருதப்பட்டாலும், அது முன்னர் கூறப்பட்ட காரணத்தினால் ஆரம்பம்முதலே பெரும் விமர்சனத்திற்குள்ளாகியது.

அடுத்ததாக, 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட காணமல் போன ஆட்களைப் பற்றிய அலுவலகத்திற்கான சட்ட மூலமும் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க இன்றுவரை தவறியிருக்கின்றது.

ஆதாரங்களைப் பலப்படுத்துவதற்கான நீதி விசாரணை கலப்பு முறையா அல்லது உள்ளாநாட்டுப் பொறிமுறையா? என்பதில் ஏற்பட்ட இழுபறி ஒருபுறம், உள்நாட்டுப் பொறிமுறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையீனம்மறுபுறம் போன்ற காரணங்களினால் நீதி விசாரணைக்கான முதற்படியே அடையப்படவில்லை.

மற்றும் இழப்பீடு தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தினாலும் “பிள்ளைகளைத் தாருங்கள்” என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது. இதற்கு உண்மை வெளிப்படுத்தப்படுதல் அவசியம். அதேவேளை பாதிக்கப்பட்ட மக்கள் உள, உடல் மற்றும் பொருளாதார ரீதியாக தமது இயல்பு வாழ்க்கையைப் பெற்றுக்கொள்வதே தமக்கான இழப்பீடாகக் கருதுகின்றனர். மற்றும் மீள நிகழாமை என்பது, மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களும் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே இவ்விடயம் சாத்தியமாகும்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற மனிதஉரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றியிருந்த ஆணையாளர்,“இலங்கையில் ஆயுத மோதல் முடிவடைந்து கிட்டத்தட்ட 12 ஆண்டுகளின் பின்னர் அனைத்து தரப்புகளாலும் இழைக்கப்பட்ட பாரதூமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கு தண்டனை விலக்குரிமை நிலை முன்னரிலும் பார்க்க இப்பொழுது ஆழமாக வேரூன்றியுள்ளது. தற்போதைய அரசாங்கம் புலன்விசாரணைகள் மற்றும் வழக்குகள் என்பவற்றை முனைப்பான விதத்தில் தடுத்துவருவதுடன், முன்னர் இதுதொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட முன்னேற்றங்களையும் பின்தள்ளியுள்ளன” எனவும் குறிப்பிட்டிருந்தார். அதேவேளை, இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்கள் மீண்டும் தோன்றுவதற்கான ஒரு பின்புலம் நாட்டில் தோன்றியுள்ளதையும் சுட்டிக்காட்டியிருந்தார்(Amnesty International, 2021).

மேற்குறிப்பிட்ட அம்சங்களின் அடிப்படையில் நோக்குகின்றபோது,இலங்கையில் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்படுவதனை அறியமுடியும். அடுத்ததாக, நிலைமாறுகால நீதிப்பொறிமுறை இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கின்ற வகையிலான ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றதா? என்பது தொடர்பில் நோக்குவோம்.

### நிலைமாறுகால நீதிப் பொறிமுறை சாத்தியமா?

நிலைமாறுகாலநீதிப் பொறிமுறையானது சகலநாடுகளுக்கும் ஒரேமாதிரியான செயற்பபாடுகள் மூலம் முன்னெடுக்கப்படுவதில்லை. அது அந்தந்த நாடுகளின் நிலைமைகளுக்கு ஏற்பவே முன்னெடுக்கப்படுகின்றன(Wahyuningroem, 2019). எவ்வாறாயினும் நிலைமாறுகால நீதிப் பொறிமுறை முன்னெடுக்கப்பட்ட நாடுகளில் காணப்படுகின்ற பொதுவான அம்சம்; பாதிக்கப்பட்ட தரப்பினரே இப்பொறிமுறையினைக் கையிலெடுத்திருந்தனர். ஆயினும்,இலங்கையில் குற்றம் இழைத்தவர்களாகக் கருதப்படுபவர்களினால் இப்பொறிமுறை முன்னெடுக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்கள் இதற்குள்

உள்வாங்கப்பட்டார்கள். ஆயினும்,பாதிக்கப்பட்டவர்கள் உருவாக்கும் பொறிமுறைக்குள், குற்றமிழைத்தவர்கள் பொறுப்புக்கூறுகின்ற பொறிமுறையினைநடைமுறைப்படுத்தப்படும் போதே இலங்கையினைப் பொறுத்தமட்டில் வெற்றிபெறும்.

ஏனெனில்,நிலைமாறுகாலநீதிப் பொறிமுறை நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலேயே கூடிய கவனத்தைச் செலுத்துகின்றது. அதாவது,இங்கு நல்லிணக்கம் என்பது மன்னிப்பு வழங்கும் செயற்பாட்டிற்கே முன்னுரிமை வழங்குகின்றது. எனவே, குற்றமிழித்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கானதொரு உபாயமாகவும் இப்பொறிமுறையினைப் பயன்படுத்த முடியும்.எவ்வாறாயினும், சா்வதேச குற்றங்களுக்கு மன்னிப்பே கிடையாது(எழில், 2016). இம் மனிதகுலத்திற்கு எதிராக நிகழ்தப்பட்ட குற்றங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தண்டிக்கப்படவேண்டியவையாகும். போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம், மற்றும் இனப்படுகொலை என்பவை இத்தகைய சா்வதேச குற்றங்களுக்குள்ளே உட்படுத்தப்படுகின்றன(எழில், 2016).

இவ்வகையிலான பலவீனங்கள் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையினுள் காணப்படுகின்றமையினாலேயே நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் பலநாடுளில் கிடப்பில் கிடக்கின்றன(Skaar, 2011). ஆகையினால், புதிய பொறிமுறை ஒன்றின் அவசியம் உணரப்படுகின்றது. இவ்விடத்தில் முன்மொழியப்படுகின்ற விடயமே ''பின் - நிலைமாறுகால நீதிப்பொறிமுறை'' ஆகும்.

எனவே மேற்குறிப்பிட்ட அம்சங்களின் அடிப்படையில் நோக்குகின்றபோது, இலங்கையில், நிலைமாறு கால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதில் இடர்கள் எதிர்நோக்கப்படுகின்றன. ஆகவே, உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் புதிய அணுகுமுறையின் அவசியம் உணரப்படுகின்றது என்பது நடைமுறையில் முன்மொழியப்பட்டுள்ள நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் காணப்படுகின்ற பலவீனங்களின் மூலம் தெளிவாகின்றது. அவ்வாறாயின், இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வகையானதொரு புதிய பொறிமுறை சாத்தியம் என்பது தொடர்பில் நோக்குதல் அவசியமாகும்.

**இலங்கையில் புதிய அணுகுமுறையின் அவசியம்:**

இலங்கையில் கடந்த 05 வருடங்களுக்கு மேலாக நிலைமாறுகால நீதி தொடர்பில் பேசுகின்றோம். இதனால், என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது? என்ன நீதி ஏற்பட்டிருக்கின்றது? குற்றமிழைத்தவர்கள் யாராவது அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்களா? அல்லது ஏதாவது உண்மைதான் வெளியிடப்பட்டிருக்கினறதா? எனப் பார்ப்போமாயின்,மேற்கூறப்பட்டவற்றில் எதுவுமே இடம்பெற்றிருக்கவில்லை. ஆட்சியிலிருந்த அரசாங்கம் கால நீடிப்பைப் பெற்றிருக்கின்றதே தவிர எவ்வகையான உருப்படியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அரசியல் கைதிகளின் சிறைவாசம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உண்மையறியும் ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் கிடப்பிலேயே போடப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர் நீக்கும் நடவடிக்கைகள்கூட முன்னெடுக்கப்படவில்லை. போதாததற்கு 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான இணை அனுசரணையிலிருந்தும் தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷஅரசாங்கம் விலகியிருக்கிறது.

உலகளவிலும் நிலைமாறுகால நீதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகச்சொற்ப அளவிலேயே நீதியைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது(Wahyuningroem, 2019). இதனை இன்னோர் வகையில் கூறின், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது என்பதனைவிட, குற்றம் இழைத்தவர்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது என்பதே மிகப்பொருத்தமானதாக இருக்கும். இவ்விடத்திலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியினைப் பெற்றுக்கொடுப்பதற்காக, நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில் முன்வைக்கப்படும் புதிய அணுகுமுறையே''பின் - நிலைமாறுகால நீதி'' ஆகும்.

இப்பின்நிலைமாறுகால நீதி தொடர்பில் முதன்முதலில் கருத்தை முன்வைத்தவராக காத் கொலின்ஸ் காணப்படுகின்றார். இவர் நிலைமாறுகால நீதியினை கேள்விக்குட்படுத்தியிருந்தார். அதாவது நிலைமாறுகால நீதியில், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலில் தடைகள் ஏற்படக்கூடும் அல்லது புதிய மாற்றங்களைத் தடுப்பதற்கான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட முடியும்போன்றவிடயங்களை இவர் நிலைமாறுகால நீதியின் குறைபாடுகளாகச் சுட்டிக்காட்டியிருந்தார். இத்தகைய பலவீனங்களை தவிர்க்கும் வகையில் முன்மொழியப்படும் அணுகுமுறையே''பின் - நிலைமாறுகாலநீதி'' ஆகும்(Carth Collins, 2010).

மேற்குறிப்பிட்ட பலவீனங்களுக்கு பின் - நிலைமாறுகால நீதிப் பொறிமுறை பதிலளிக்கின்றது. இவர் பின்நிலைமாறுகால நீதி தொடர்பில் 06 பண்புகளை முன்வைத்திருக்கிறார். அவையாவன;

ஜனநாயகத்தின் தரத்தினை மேம்படுத்துதல்.

ஆரம்பகால நிலைமாறுகால சமரச விடயங்களை கேள்விக்குட்படுத்துதல்.

அரசு சாரா தனிநபர்களினால் குறித்த பொறிமுறைக்குள் உள்வாங்குதல்.

இத் தனிநபர்கள் பாதிக்கப்பட்டவர்களாக, குழுவாக, நாட்டின் எல்லைக்கு அப்பாலும் இருக்க முடியும்.

இவர்கள் தமது நோக்கங்களை அடைவதற்கான வெவ்வேறு வடிவங்களையும் ஏற்றுக்கொள்ளல்

குறித்த செயற்பாடு குறித்த நாட்டின் எல்லையைக் கடந்து இன்னுமொரு பொது வெளியில் முன்னெடுத்தல்,ஆகிய விடயங்கள் இவரினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன(Carth Collins, 2010).

இதனடிப்படையில் இவ்விரு அணுகுமுறையினையும் நோக்குகின்றபோது, இடைக்கால நீதி என்பது உள்நாட்டில் இயக்கப்படுகின்றதொரு பொறிமுறையாகும். ஆனால், இடைக்காலத்திற்குப் பிந்திய நீதி என்பது நாடு கடந்து சர்வதேச சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகும். ஏனெனில், உள்நாட்டுப் பொறிமுறை குற்றவாளிகளை நீதிக்கு முன்கொண்டுவருவதற்கான ஊக்கியாக அமையவில்லை. ஆயினும் பின்நிலைமாறுகால நீதி என்பது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் சர்வதேச அரங்கில் பொறுப்புக்கூற வைப்பதற்கான தளத்தினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதனடிப்படையில், இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான பரிகாரத்தினைப் பெற்றுக் கொள்வதில் தடைகள் ஏற்படுத்தப்படுவதனால், பின் - நிலைமாறுகால நீதிப்பொறிமுறையே இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருத்தமானது என்பதை மேற்கூறிய வாதங்களின் அடிப்படையில் தெளிவாகின்றது.

**முடிவுரை:**

இலங்கையைப் பொறுத்தமட்டில், நிலைமாறுகால நீதி பொறிமுறை என்பது உள்நாட்டு யுத்தத்தின் இறுதிகாலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும், மனித குலத்திற்கு எதிரான உரிமைமீறல்களுடன் தொடர்புபட்டதொன்றாகும். குறிப்பாக 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிற்பாடே, இது தொடர்பிலான வாதப்பிரதி வாதங்கள் இலங்கைளில் இடம்பெறலாயின.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாகியும் இன்னும் முரண்பட்ட சமூகங்கிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை. காரணம், பாதிக்கப்பட்ட மக்கள் அதற்கான பரிகாரத்தினைப் பெற்றுகொள்ளாமையே ஆகும். இதற்கானதொரு பொறிமுறையாகவே இந் நிலைமாறு கால நீதிப் பொறிமுறை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதற்கு அப்போது அதிகாரத்திலிருந்த நல்லாட்சி அரசாங்கமும் இணை அனுசரனை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு அரசியல் சூழல் பரிந்துரைக்கப்பட்ட பொறிமுறையினை நடைமுறைப்படுத்தி சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சாதாகமானதாக இல்லை.

உண்மைமணைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் தொடர்பிலான வாதப் பிரதிவாதங்கள், உண்மைமணை வெளிப்படையாக ஏற்றுக் கொள்வதில் உள்ள தயக்கம், இருப்பு அரசியல், இனவாதம்,காலத்தை இழுத்தடிக்கும் போக்கு போன்றன இதற்குத் தடையாக உள்ளன. அதேநேரம் பாதிக்கப்பட்ட மக்களும் தங்களது இயல்பு வாழ்கையினைத் தொடர முடியாமல்,தமக்கான நீதிப் பாரிகாரத்தை நம்பியிருப்பது மறுக்க முடியாத உண்மை.

மறுபுறம்,நிலைமாறுகால நீதிப் பொறிமுறை தொடர்பான உளகளாவிய நம்பிக்கையீனமும் வளர்ந்து கொண்டே வருகின்றது. காரணம் குற்றமிளைத்தவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கானதொரு வழிமுறையாக இப்பொறிமுறையினை கடந்தகாலங்களில் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த இடத்திலேயே, பின்நிலைமாறு கால நீதிப்பொறிமுறை தொடர்பிலான அணுகுமுறையின் தேவை முன்வைக்கப்படுகின்றது. அதாவது தண்டனை இழைத்தவர்களை குறித்த நாட்டிற்கு வெளியே பாதிக்கப்பட்டவர்களால் விசாரணைகள் முன்னெடுக்கக்கூடிய வகையில் இப்புதிய அணுகுமுறை அமைந்திருப்பது, பாதிக்கப்பட்ட மக்கள் பார்வையில் சாதகமான அம்சமாக இவ்வணுகுமுறை இருப்பதனாலாகும். பொதுவான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் நகர்வும் புதிய அணுகுமுறை நோக்கியே நகர்த்தப்படக்கூடிய சாத்தியம் உள்ளது.

## Refferences:

[1] Amnesty International, 2021, *Sri Lanka: Landmark UN resolution marks crucial turningpoint on Justice & accountability*.URL Available on:https://www.amnesty.org/en/latest/news/2021/03/sri-lanka-landmark-un-resolution-marks-crucial-turning-point-on-justice-and-accountability/

[2] Carth Collins, 2010, *Post- Transitional – Justice*, The Pennsylvania State University Press, University Park, Pennsylvania.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR

[3] Crocker D, 2019, *Rocking with Past wrong: A normative Framework*, URL Available on:Reckoning_with_Past_Wrongs_A_Normative_Framework.pdf.

[4] Foreign Ministry, Sri Lanka, 2017, Hansard, URL Available on: https://hansard. parliament.uk/Lords/2017-10-12/debates/14CAA83D-8895-4182-8C4F-D964E0A5B399/SriLanka.

[5] Geoff D, 2010, *Impact Assessment, not Evaluation; defining a limited role for positivism in the study of Transitional Justice*:International Journal of Transitional Justice4(3), URL Available on:https://www.geoffdancy.com/impact-assessment-not-evaluation-defining-a-limited-role-for-positivism-in-the-study-of-transitional-justice/.

[6] Paikiasothy S, 2017, *Challenges to Transtional Justice in Sri Lanka*, URL Available on:http://harvardhrj.com/wp-content/uploads/sites/14/2017/10/Saravanamuttu.pdf

[7] Skaar E, 2011, *Explaining Post- Transitional Justice*, Judicial Independence and Human Rights in Latin America, URL Available on: https://link.springer.com/chapter/10.1057/9780230117693_2.

[8] Susanne B, 2014,*Transitional Justice Theories*(Edi), a glassHouse book, URL Available on:https://www.routledge.com/Transitional-Justice-Theories/Buckley-Zistel-Beck-Braun-Mieth/p/book/9781138924451.

[9] Wahyuningroem S, 2019, *Towards Post – Transitional Justice: The failures of Transitional Justice and The role of civil Society in Indonesia*, Journal of Southeast Asian Human Rights, Vol.3, URL Available on:11497-529-25958-1-10-20190716%20(1).pdf.

[10] Navinan.R, 2017,*Chlanges in Transitional Justic*,URL Available on:https://yarl.com/forum3/topic/192232 .

[11] Alilan.R,2016,*Reconciliation and Transitional Justice of the Government of Sri Lanka*URL Available on:https://maatram.org/?p=4325



© 2022, IRJTSR 